DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC.No.66/2020

Prosecution witness – PW.3

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி.மாரியம்மாள் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused absent. Petition u/s.317 Cr.P.C. filed and allowed)

**13.06.2024 – 01.55 PM**

முதல் விசாரணை

1. நான் ஏ.புனவாசல் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி எனக்கு மருமகன்.

2. எனது மருமகன் மதுஅருந்து விட்டு தினமும் தகராறு செய்து வந்தார். கடந்த 05.03.2020ம் தேதியன்று இரவு சுமார் 10.45 மணியளவில் நானும், எனது மகளும், எனது பேரனும், வீட்டில் துாங்கிக் கொண்டிருந்தேன்.

3. எனது மருமகன் வில்வத்துரை அருவாளுடன் வந்து என்னை அருவாளால் இடது பக்க இடுப்பில் வெட்டினார். தடுக்கவந்த எனது மகளையும் வெட்டினார். எனது மகளுக்கு இடது தோள்பட்டை, இடது கை விரல், வலது மணிக்கை ஆகிய இடங்களில் காயம்பட்டது. பின்னர் தப்பித்து ஓடிவிட்டார்.

4. பின்னர் காயம்பட்ட நானும், எனது மகளும் அன்று நள்ளிரவு 12.00 மணியளவில் கடலாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். நள்ளிரவு 02.30 மணியளவில் எங்கள் இருவரையும் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு தகவல் அளித்தோம்.

5. எனது மகள் போலீசாரிடம் புகார் அளித்தார். 15 நாட்கள் சிகிச்சை பெற்றோம். இன்று வரை எங்களை எங்களது மருமகன் அருவாளால் மிரட்டி வருகிறார். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை

6.

7. அ.சா.1 உள்ளூர்க்காரர் என்ற முறையில் தெரியும். எதிரியை தற்போது நீதிமன்றத்தில் வைத்து பார்த்துள்ளேன்.

8. எனக்கு வழக்கு சம்மந்தமாக நேரடியாக எதுவும் தெரியாது. சம்பவத்தை பார்க்கவில்லை. என்னை போலீசார் விசாரிக்கவில்லை

(அரசுத் தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரியல் அனுமதி அளிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் வழக்கு சம்பவம் நடந்த போது சம்பவ இடத்தில் இருந்ததாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், சண்டையை விலக்கிவிட்டதாகவும், அ.சா.1க்கு ஏற்பட்ட காயம்பற்றியும் போலீசார் விசாரித்த போது சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு, எதிர் தரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் கூறிய விபரங்களை நான் சொல்லச் சொல்ல தட்டச்சர் தட்டச்சு செய்த விபரங்கள் சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மா.உ.ம.நீ.ந, கமுதி